ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1725/3 - 2011 සැප්තැම්බර් 26 වැනි සඳුදා - 2011.09.26

*1725/3 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பீ. 1/2003.*

### *2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டம்*

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இரண்டாயிரத்து நான்காமாண்டு யூலை மாதம் முப்பதாம் நாளன்று பாங்கொக்கில் செய்து கொள்ளப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் தாய்லாந்து இராச்சியத்தின் அரசாங்கத்திற்கும் இடையேயான உடன்படிக்கை தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டுமென இக்கட்டளையின்மூலம் வெளிப்படுத்துகின்றேன். இலங்கை அரசாங்கத்துக்கும், பொதுநலவரசு நாடொன்றாகவிராத நாடொன்றான தாய்லாந்து அரசாங்கத்துக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட இவ்வுடன்படிக்கை, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர சட்ட உதவியைக் கையாள்வதுடன், ஒத்துழைப்பினூடாக குற்றச் செயல்களைப் புலனாய்வு செய்தல், அவற்றிற்கெதிராகக் குற்ற வழக்குத்தொடுத்தல் மற்றும் அவற்றைத் தடுத்தல் என்பவற்றில் உடன்படிக்கைக்கான இரு திறத்தவர்கள்பால் பயனுறுதன்மையைச் சீர்ப்படுத்தலுடன் மற்றவற்றுக்கிடையில் சம்பந்தப்பட்டுமுள்ளது.*

*அப்துல் ரவூப் ஹக்கீம்,*
*நீதி அமைச்சர்.*

கொழும்பு,
*2011, செத்தெம்பர் 22.*

*10 - 219*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.